Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# தமிழக நாடகத்தில் இசை

28

கு. பிரகாஷ்
உதவிப் பேராசிரியர் (நாதஸ்வரம்), இசைத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அண்ணாமலைநகர்

**முன்னுரை**

இயல், இசை, நாடகம் எனும் பிரிவில் நாடகம் என்பது தமிழர் மரபில் நாட்டியத்தையே முன் குறித்துள்ளது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிவாக்கில் பம்மல் சம்பந்த முதலியார் காலத்தில் மேலை நாட்டார் குறித்துள்ள 'நாடகம்' எனும் பொருள்படும்படி வளரத் தொடங்கியது. நாட்டியம் எனும் தன்மையிலிருந்து வளர்ந்து அரங்கு நடிப்பு, வசனம், பாத்திரம், ஆடல் பாடல், உரை, ஒப்பனை, இசை, இசைக்கருவி, நேரம், காலம் இயக்கம், பிரதி, மேடைப்பிரதி, ஒலி-ஒளி, பார்வையாளர், அரங்கியல் தொழில் நுட்பங்கள் எனும்படியான தன்மைகளுடன் 'நாடகம்' உருப்பெற்றுள்ளது. தமிழ் நாடகத்தின் இசை அன்று, தமிழ் நாடகத்தின் இசை இன்று எனும் முறைமயில் இங்கு ஆய்வு மேற்கொள்ளலாம். கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் துவங்கிய தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நாடகம் வரை அன்று என்றும், அதன் பிந்தைய கால நாடகங்களை இன்று என்றும் எல்லைப்படுத்தி இக்கட்டுரை அமைகிறது. கால வரிசைப்படி எடுத்துக்காட்டுகள் அமையாது. பலராலும் எடுத்துக்காட்டித் தமிழ் நாடகத்தின் இசையை அடையாளப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**தமிழ் நாடக இசை**

நாடகம் என்ற சொல் நாட்டியத்தை மட்டுமே குறித்து அமைந்தது. நாட்டியம் என்பதற்கு நாடகம் என்றே பொருள் கொள்வர். நடனமாகிய நிருத்தமும், அபிநயக் கலையால் கதையை (அல்லது கருத்துக்களை) வெளிப்படுத்தும் நாட்டியமும் கலந்து நிகழும் கலை நிருத்தியம். பாட்டின் பொருளுக்கேற்ப அபிநய கைகளை இயக்கிய வண்ணம், பாதங்களும் தாளத்திற்கேற்ப இயங்குவது இதன் இயல்பாகும். பல 'நடன நாடகங்கள்' இன்ற வழக்கில் தவறாக 'நாட்டிய நாடகம்' என்று அழைக்கப்படுகின்றன. இவை 'நிருத்திய நாடகங்கள்' என்று தான் அழைக்கப்பட வேண்டும். ஏனென்றால் 'நாட்டியம்' என்ற சொல்லுக்கே 'நாடகம்' என்றுதான் பொருள். நாட்டியமே நாடகம் எனத் தமிழ் மரபில் தமிழரும் கருத்துக் கொள்வர்.

**கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் நாட்டிய சாஸ்திரம்**

கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் எழுந்ததாக நாட்டிய சாஸ்திரம் மார்க்க, தேசி என்ற இருவகையான நாடக மரபுகளைப் பற்றிக் கூறுகின்றது. இரண்டும் இக்காலக் கட்டத்தில் இந்திய உபகண்டத்தில் வழக்கிலிருந்த நாடக மரபுகள் ஆகும். மார்க்கம் உயர் செந்நெறி நாடக மரபு. தேசி அவ்வத்தேசங்கட்குச் சிறப்பாக உரிய நாடக மரபு. தேசி இடத்துக்கு இடம் மாறுபட்டது.

மார்க்கம் - செவ்வியல்
தேசி - நாட்டுப்புறவியல்

இருவகையான ஆட்டங்களிலும், கூத்துக்களிலும் அதாவது நாடகங்களிலும், காட்சிகளுக்கேற்ப, கதைப்போக்குகளுக்கேற்ப, உணர்ச்சி மோதல்களுக்கேற்ப, பார்வையாளர்களின் இரசனை முறைகளுக்கேற்ப இசைவகைகள் அடிநிலைகளாக விளங்கின. தென்னகச் செவ்விசை, தமிழிசை, இந்துஸ்தானி இசை, நாட்டுப்புற இசை வகைகள் எனப் பல உண்டு.

**செவ்விசையில் நாட்டியத்திற்கேற்றப் பாடல்கள்**

தஞ்சை நால்வர் எனும் சின்னைய்யா, பொன்னைய்யா, சிவானந்தம், வடிவேலு என்பவர்கள் நாட்டியத்திற்கென்றே உருப்படிகள் அமைத்துப் பாடியவர்கள் ஆவர். அருணாச்சலக் கவிராயர், முத்துத் தாண்டவர், மாரிமுத்தா பிள்ளை போன்றோர் பதங்கள் எழுதியவர்கள். மகாகவி பாரதியார், சுத்தானந்த பாரதியார் போன்றவர்கள் பின்னால் வந்த நாட்டியப் பாடல்கள் எழுதியவர்கள்.

அலைபாயுதே கண்ணா- ஊத்துக்காடு வெங்கடசுப்பிரமணியம்

இடது பதம் தூக்கி - பாபநாசம் சிவம்

போன்றோர் நாட்டியத்திற்கேற்பப் பாடல்கள் செய்த வரிசையில் அடங்குவர். கர்நாடக இசை என்பது திராவிட மொழி பேசும் பகுதிகளில் விளங்கும் இசை என்றும், இந்துஸ்தானி இசை விளங்கும் பகுதி வடபகுதியான வடநாடு என்றும், இருபிரிவாக இசையை இந்தியாவில் பிரிப்பர். திராவிட இயக்கம், தமிழியக்கம் வளர்ந்து வரும்போது தமிழ் இசை தமிழ்ப்பண்களிலிருந்தும், தமிழ் மொழிப் பாடல்களிலிருந்தும் அடையாளம் காணத்தக்க வகையில் அடித்தளம் கொண்டு கர்நாடக இசையிலிருந்து பிரித்து வளர்க்க தமிழியக்கம் முனைந்தது. தமிழிசை இயக்கத்திற்குத் தனித்த வரலாறு எழுதப்பட வேண்டியுள்ளது.

முல்லையப்பன்- மோகனம்

காந்தார பஞ்சமம் - பூபாளம்

செந்துருத்தி - மத்யமாவதி

என தமிழிசைக் கர்நாடக இசையிலிருந்து தனித்த பெயருடன் விளங்குகிறது. குரல், துத்தம், கைக்கிளை, இளி, விளரி, தாரம், உழை என்பது சரிகமபதநி எனும் ஏழு (7) சுரங்கள் ஆகும். இசை குறித்த சர்ச்சைகள் இசை வகைகளுள் இருப்பினும் பொதுவான தன்மைகளில் இசை, தாளம், பாடல் எனும் அடித்தளங்கள் நாட்டியத்திற்கு ஆதாரங்களாக அமைந்துள்ளன.

- தென்னகச் செவ்விசை (கருநாடக இசை)
- தமிழ்த் திருமுறை இசை

என நாமறிந்துள்ள இசை வகைகள் தமிழ் நாடகங்களில் (நாட்டியம்) அமைந்திருந்தமைக் குறித்து அறியமுடிகிறது.

**நாடகக்கலை வளர்ச்சி நிலைகள்**

1930-லிருந்து 1945 வரையிலுள்ள காலத்தைத் தமிழ்ப் புத்துணர்ச்சி பெற்ற காலம் என்பார்கள். இக்காலத்தில் சிறுகதை, நாவல் ஆகிய துமுறையில் உயர்ந்த படைப்புகளைத் தந்துள்ள புதுமைப்பித்தன், பிச்சமூர்த்தி, கு.ப. ராஜகோபாலன், க.நா. சுப்ரமண்யம், ந. சிதம்பர சுப்ரமணியன் ஆகியோர் நாடகங்களும் எழுதிப் பார்த்தார்கள். இவை அதிகமும் மேடைப் பிரக்ஞையின்றி, நாடகத்தைத் தன்னிறைவு கொண்ட தனி இலக்கியப் பிரிவாகக் கண்டு எழுதப்பட்டவை. பின்வந்த

காலங்களில் கதையை வசனமாகப் பிரித்து எழுதிய உருவங்கள் பிரபல கைகள் மூலமாகவே தோன்றின என்றாலும் சுய முயற்சிகள் என்று சொல்லும்படியாக நவீன நாடகங்கள் ஏதும் தமிழில் தோன்றவில்லை. ஒரு சில மொழிபெயர்ப்புகள் கிடைத்தன. இவற்றில் க.நா. சுப்ரமண்யம் மொழிபெயர்த்த கிப்ஸனின் 'பொம்மை வீடு'ம், எஸ். மகராஜன் மொழிபெயர்த்த ஷேக்ஸ்பியரின் 'ஹாம்லெட்', 'லீயர் அரசன்' ஆகியவையும், சி.ஆர். மயிலேறு மொழிபெயர்த்த மோலியரின் 'கருமி'யும் குறிப்பிடத்தகுந்தவை. நவீன நாடகத்தைப் பற்றிய பிரக்ஞை தமிழில் 1960-க்குப் பின் மெதுவாக வளர்ந்து வருகிறது. வெங்கட் சாமிநாதன் எழுதியுள்ள கட்டுரைகளில் தமிழ் நாடகத்தின் வறட்சி பற்றி விரிவாக ஆராய்ந்து, இந்தி, வங்காளம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டு, தில்லியில் அரங்கேறும் நாடகங்களைப் பற்றிய செய்திகளையும் தந்துள்ளார். நாடகம் ஒரு அதிசயப் பொருட்காட்சி என்ற நிலை மாறி, திரைகள் அற்ற, ஒலிபெருக்கி அற்ற, ஜோடனைகள் அற்ற நிலையில், வெளிப்புறங்களில் மரத்தடிகளிலும் பொதுப் பூங்காவின் ஒதுக்குப்புறங்களிலும் கல்கத்தாவிலும் தில்லியிலும் நடித்துக் காட்டப்படுகின்றன. இதுபோன்ற ஒரு புரட்சிகரமான மாற்றம் தோன்றியதில் முக்கியமான பங்கு பெறுகிறவர் தில்லி நேஷனல் ஸ்கூல் ஆப் டிராமாவில் இயக்குநராகப் பணியாற்றும் அல்காசி ஆவர். அவருடைய மாணவர்கள் நாடகத்தை அக்கலைக்குரிய தன்மையில், அக்கலைக்கு அப்பாற்பட்டதாக வளர்ந்து தொங்கிக் கொண்டிருந்தவற்றை வெட்டியெறிந்து இந்தியப் பரப்பில் நாடகத்திற்குப் புனர் வாழ்வு தந்துவருகிறார்கள்.

**கட்டபொம்மு கூத்து**

நெல்லை மாவட்டத்தில் கட்டபொம்மு கூத்தினை ஆண்டுக்கொரு முறை இன்றளவும் நடத்திவரக் காணலாம். இக்கூத்தில் தெலுங்கு மொழியும் இடையிடையே பயின்றுவரக் காண முடிகிறது. இதனைப் பதிப்பித்துள்ள பதிப்பாசிரியர் பலரின் துணையோடு ஆங்காங்கே அடிக்குறிப்புக்களில் மொழிபெயர்த்தும் தந்துள்ளார். பின் இணைப்பில் உள்ள கட்டபொம்மு நாடகம் நெல்லை மாவட்டத்தினர் ஆண்டுதோறும் (நாடகமாக) கூத்தாக பாஞ்சாலங்குறிச்சியில் நடத்திவருகின்றார்.

கட்டமொம்மு கூத்து (கதைப்பாடல்) எனும்படி பதிப்பாசிரியர் குறித்துள்ளார். கட்டபொம்மு கூத்து பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மு துரைக் கதை எனக்கூறி கதை தொடங்குகிறது. பின்னர்,

தன்னானா தானனா தன்னன்னா
தன்னானா தானனா தன்னன்னா

எனச் சந்தநடையில் அமைந்த நாட்டுப் பாடல் வடிவில் கதைப் பாடல் (கூத்து) தொடங்குகிறது.

பிள்ளையார் துதியுடன் அமைந்துள்ள இதில், கட்டபொம்மு கதை யான் படிக்க,

கண்ணாலே பார்த்திட வேண்டுமைய்யா,
ஊமைத் துரைக் கதை நான் படிக்க
உண்மை உரைத்திட வேண்டுமய்யா
பாஞ்சாலத்த யான் படிக்க
பக்கத் துணை செய்ய வேண்டுமைய்யா,
சக்கதேவிக் கதை நான் படிக்க

தயவு செய்திட வேண்டுமைய்யா,

என்றும் சரஸ்வதி துதி, முருகன் துதி, சக்கம்மாள் துதி என அமைந்தும் கதை ஆரம்பமாகிறது.

**முடிவுரை**

தமிழ் மக்களால் சாஸ்திரிய இசை, கருநாடக இசை என இது அறியப்படுகிறது. சிலப்பதிகாரம் குறிப்பிடும் மாதவியின் பதினொரு (11) ஆடல்வகைகளிலும், மாயோன், சிவன், ஆறுமுகன், சேயோன், அயிராணி எனும் தெய்வங்கள் தொடர்பு இருந்தன என உரையாசிரியர்கள் குறிப்பிட அறிகிறோம். தென்னகச் செவ்விசை வடிவங்களின் தாக்கங்கள் பதினொரு ஆடல்களிலும் ஏற்பட்டன. நாட்டுப்புற இசைவடிவங்களும் பதினொரு ஆடல்களில் பயின்று வந்துள்ளமை குறித்துத் தனித்த நிலை ஆய்வுகள் தேவையாய் உள்ளன என்பதில் ஒருபோதும் ஐயமில்லை.

**துணைநின்ற நூல்கள்**

1. முனைவர் கு.பகவதி, தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-13, 2000.
2. முனைவர் கே.ஏ. குணசேகரன், நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-13, 2002.
3. சுந்தர ராமசாமி, மூன்று நாடகங்கள், காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி. சாலை, நாகர்கோவில்-01, 2006.